2
ஆவது

# உலகத் தொல்காப்பிய ஆராய்ச்சி மாநாடு

**கனடா 2026**

## தொல்காப்பிய மன்றம் - கனடா

**Association for Tolkappiyam - Canada**

www.tolkappiyam.ca



**நாள்**
19, 20 செப்டம்பர், 2026

**இடம்**
டொரோண்டோ, கனடா



## மன்றத்தைப் பற்றி

கனடாத் தொல்காப்பிய மன்றம் கடந்த 11 ஆண்டுகளாகக் கனடாவின் டொரோண்டோ மாநகரில் இயங்கிவரும் பதிவுசெய்யப்பட்ட ஓர் இலாப நோக்கற்ற நிறுவனம் (Non-Profit Organization) ஆகும்.

அடுத்த தலைமுறைக்குத் தமிழைக் கடத்துதல், தொல்காப்பியத்தைப் பரப்புதல் போன்றவற்றை நோக்கமாகக் கொண்டு தொல்காப்பியத்தைச் சார்ந்து பயிலரங்குகள், தொடர்வகுப்புகள், ஆண்டுவிழாக்கள், மாநாடுகள், கலை நிகழ்ச்சிகள், கண்காட்சிகள், போட்டிகள், நூல் வெளியீடுகள் போன்றவற்றை நடத்திவருகிறது. இவற்றின்மூலம் எதிர்காலத் தலைமுறையினருக்குத் தொல்காப்பியத்தை எடுத்துச்செல்லத்தக்கதொரு தமிழ்த் தலைமுறையை உருவாக்கவேண்டியுள்ளது.

- ஒவ்வொரு மாதமும் முதன்மைப் பேச்சாளர், இளம் பேச்சாளர், சிறார் பேச்சாளர் என மூன்று பிரிவினரைக் கொண்டு தொல்காப்பியம் குறித்தான இணையவழிக் கருத்தரங்குகளை நடத்திவருகிறது.
- ஆண்டுதோறும் தமிழ்த்திறன் போட்டிகளை நடத்திப் பரிசளிக்கிறது.
- ‘தொல்காப்பிய விநாடி-வினா’ போட்டிகளை நடத்தி வெற்றிபெறும் முதல் மூவருக்குத் தொல்காப்பியச் செல்வன்-செல்வி (சிறுவர்), தொல்காப்பியத் திருவாளர்-திருவாட்டி (பெரியோர்) பட்டங்களை வழங்கிவருகிறது.
- தொல்காப்பியப் பரவலாக்கத்திற்குப் பயிலரங்குகளையும் தொடர் வகுப்புகளையும் நடத்திவருகிறது.
- இளையோருக்காக நிறுவப்பட்ட ‘மாணவர் பாசறை’ மூலம் கனடாவில் வாழும் நமது அடுத்த தலைமுறையினர் தொல்காப்பியப் புலமை பெற ‘இளையோருக்கான தொல்காப்பியப் பயிலரங்கு’ களையும் போட்டிகளையும் நடத்துவதோடு மன்றச் செயல்பாடுகளைப் பொறுப்பேற்று நடத்தும் தலைமைத்துவப் பயிற்சிகளையும் வழங்கிவருகிறது.

இந்த மன்றம், தொல்காப்பிய மாநாட்டை ஓர் ஆண்டும் அடுத்த ஆண்டு தொல்காப்பிய விழாவினையும் நடத்தும் திட்டத்தில், தனது முதலாம் உலகத் தொல்காப்பிய ஆராய்ச்சி மாநாட்டை 2024ஆம் ஆண்டு செப்டம்பர் 20, 21, 22 ஆம் நாட்களில் வெற்றிகரமாக நடத்தி முடித்தது.

இவ்வகையில் கனடாத் தொல்காப்பிய மன்றம், எதிர்வரும் 2026ஆம் ஆண்டு புரட்டாசி (செப்டம்பர்) மாதப் பிற்பகுதியில் தனது இரண்டாம் உலகத் தொல்காப்பிய ஆராய்ச்சி மாநாட்டினை, கனடா, டொரோண்டோ (Toronto) மாநகரில் நடாத்தத் திட்டமிட்டுள்ளது.

## மாநாட்டிற்கான நோக்கம்

- தொல்காப்பியத்தின் பெருமையைத் தமிழினத்தோடு பிற சமூகத்தினரும் அறியும்படிச் செய்தல்.
- தொல்காப்பியத்தின் அனைத்துச் சிறப்புகளையும் ஒருங்கே தொகுத்தல்.
- இளைஞர்கள் மத்தியில் "தொல்காப்பியத்தை நாம் ஏன் கற்க வேண்டும்" என்று எழும் வினாவிற்குப் பரந்த விளக்கம் கொடுத்தல்.
- தொல்காப்பியத்தைக் கற்க-கற்பிக்க, கொண்டாட-பரவலாக்கம் செய்வதற்கான காரணங்களை முழுமையகாகத் தொகுத்தல்.
- தொல்காப்பியத்தையும் உலகளாவியத் தொல்காப்பிய ஆய்வறிஞர்களையும் ஆய்வுகளையும் இளைய தலைமுறையினருக்கு அறிமுகப்படுத்துதல்.

## மாநாட்டுக் கருப்பொருள்

**தொல்காப்பியத்தை நாம் ஏன்**
**கற்க-கற்பிக்க, கொண்டாட-பரவலாக்க வேண்டும்?**

| | | | |
|---|---|---|---|
| 1. | அகராதியியலுக்காக | 18. | தகவல் களஞ்சியத்திற்காக |
| 2. | அரசியலுக்காக | 19. | தாவரவியலுக்காக |
| 3. | அறத்துக்காக | 20. | தொல்காப்பியரின் புலமைக்காக |
| 4. | அறிவியலுக்காக | 21. | தொன்மைக்காக |
| 5. | இசைக்காக | 22. | நாடகத்திற்காக |
| 6. | இலக்கண அறிவுக்காக | 23. | படைப்பிலக்கியத்திற்காக |
| 7. | இலக்கியங்கள் படைப்பதற்காக | 24. | பண்பாட்டுக்காக |
| 8. | இலக்கியப் புரிதலுக்காக | 25. | புழங்குபொருள்களுக்காக |
| 9. | உயிரினங்களுக்காக | 26. | மானிடவியலுக்காக |
| 10. | உளவியலுக்காக | 27. | மெய்யியலுக்காக |
| 11. | கட்டமைப்புக்காக | 28. | மொழி வளர்ச்சிக்காக |
| 12. | கலைக்காக | 29. | மொழிக் கற்பித்தலுக்காக |
| 13. | கோட்பாடுகளுக்காக | 30. | மொழியியலுக்காக |
| 14. | சமய, தத்துவ மரபுகளுக்காக | 31. | வரலாற்றுக்காக |
| 15. | சமூகவியலுக்காக | 32. | வாழ்வியலுக்காக (அகம், புறம்) |
| 16. | சூழலியலுக்காக | 33. | மரபுக்காக (நம்பிக்கை, பழக்கவழக்கம், உணவு, பிற) |
| 17. | தமிழ்-தமிழர் அடையாளத்திற்காக | | அன்ன பிற... |

மேற்குறித்த வினாவுக்கு (4 செயல்களுக்கு: கற்க-கற்பிக்க, கொண்டாட-பரவலாக்க) விடையளிக்கும் வகையில் மேற்சுட்டிய 33 தலைப்புகளுள் ஒன்றிலோ அல்லது இவைபோன்றதொரு தலைப்பிலோ தொல்காப்பியத்தின் சிறப்புகள் புலப்படுமாறு ஆய்வுக்கட்டுரை அமைதல்வேண்டும்.
கட்டுரை அதற்குரிய தரத்திலும் வடிவத்திலும் அமைதல் வேண்டும்.

மாநாட்டுக் கருப்பொருள் தொடர்புடைய கட்டுரைகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தொல்காப்பியம் குறித்துப் பொதுநிலையில் எழுதப்படும் கட்டுரைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

<u>பதிவுக் கட்டணம்</u>

எந்தக் கட்டணமும் இல்லை.

<u>ஆய்வுச் சுருக்கம்</u>

2 பக்கங்களுக்குள்.

<u>ஆய்வுக் கட்டுரை</u>

10-15 பக்கங்களுக்குள்.

<u>பக்கக் கட்டமைப்பும் கோப்பும்</u>

1.5 வரி இடைவெளி,
12 எழுத்துரு அளவு,
தட்டச்சு ஒருங்குறி (Unicode),
வோர்டு (Word) கோப்பு (File),
நான்கு பக்கமும் Margin 1”
கட்டுரையாளரின் பெயரும் சுருக்கமான தலைப்பும் கோப்பின் பெயராக இருக்க வேண்டும்.

**ஆய்வுச் சுருக்கங்கள் அனுப்பக் கடைசிநாள்**
**01-03-2026**

**ஆய்வுச் சுருக்கம் தெரிவுசெய்யப்பட்ட முடிவு வெளியாகும் நாள்**
**01-04-2026**

**முழுக் கட்டுரை அனுப்பக் கடைசிநாள்**
**01-06-2026**

**முழுக் கட்டுரை தெரிவுசெய்யப்பட்ட முடிவு வெளியாகும் நாள்**
**01-07-2026**

கட்டுரைச் சுருக்கம் மற்றும் முழுக் கட்டுரையைப் பின்வரும் இணைப்பு (Google form) அல்லது விரைவுத் துலங்கல் குறியீடு (QR) மூலம் மட்டுமே பதிவுசெய்து சமர்ப்பிக்க வேண்டும். மின்னஞ்சல் மூலம் அனுப்புதல் கூடாது.

https://forms.gle/QN63VR5v2KJAH5VA9

மேலும் விவரங்களுக்கு


| தலைவர் | செயலாளர் | ஒருங்கிணைப்பாளர் |
|---|---|---|
| +1 (647) 881-3613 | +1 (647) 850-0152 | +1 (437) 979-3006 |

conference@tolkappiyam.ca